IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில்,
டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து,
ATT காலனி, கோயம்புத்தூர்–641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.
ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.68,75,844/– (01.10.2026 தேதி அன்று)** தொகையை **திருவிவேக். B மற்றும் திருமதி.B. அமுதா,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடமானம் வைக்கப்பட்ட, **ஆக்கபூர்வ சுவாதீனம் (Constructive Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **20.11.2026** தேதியில் **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.80,73,000/–** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.8,07,300/–.**

அசையாச் சொத்து விபரம்

சேலம் தாலுகா, அழகாபுரம் புதூர் எல்லைக்குள், வார்டு-C, பிளாக்–6, டவுன் சர்வே எண்.137, இதில் மறு சர்வே வார்டு-K, பிளாக்–6, டவுன் சர்வே எண்.52/15 மற்றும் வார்டு-K, பிளாக்–6, டவுன் சர்வே எண்.52/3 ல் அமைந்துள்ள, 620 சதுர நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்ட கட்டிடம் கூடிய (கட்டிடப் பரப்பு 1,480 சதுரடி) குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 23.10.2026 ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி லிட்

CUB

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் மீட்பு மற்றும் மேலாண்மை துறை
நிர்வாக அலுவலகம் : எண்: 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.
மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, 2401622 ஃபேக்ஸ் : 0435-2431746

அசையாச் சொத்து/சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

பத்திரப்படுத்துதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI ACT, 2002) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்துக்களை மின் ஏலம் விடுவதற்கான விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்கள், ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு (பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநர்) அடமானம் அல்லது பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் **ஆக்கபூர்வமான சுவாதீனம் (Constructive Possession)** சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெறப்பட்டுள்ளது. சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் (பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநர்)-க்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.5,55,886/- (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு ரூபாய் மட்டுமே) 26.10.2026** அன்றைய தேதியிலான நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் **"உள்ளது உள்ளபடி", "எப்படி உள்ளதோ" "அப்படி இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் **15.12.2026** அன்று ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்கள் விவரம் எண்: **1.M/s. ஏ.வி.எஸ். பவர் சிஸ்டம்ஸ்,** D.எண்:4-546, காமராஜ் நகர், ஏ.பள்ளிப்பட்டி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அரூர் தர்மபுரி மாவட்டம் - 636905. **2. திருமதி.ஆர்.அனந்தி,** W/O.M.காமராஜ், D.எண்:4-546, காமராஜ் நகர், A பள்ளிப்பட்டி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அரூர் தர்மபுரி மாவட்டம்-636905. **3.Mr. M.காமராஜ்,** S/o.M.வேலாயுதம், D.No:4-546, காமராஜ் நகர், A.பள்ளிப்பட்டி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அரூர் தர்மபுரி மாவட்டம்-636905.

குறிப்பு:
எங்கள் 425-அரூர் கிளை 06-நவம்பர்-2015 தேதியிட்ட நிதி உதவியையும் (SWAYAM GRIHA - SAL BR:501312030005729) வழங்கியுள்ளது எண் 3 ஆல் கோரப்பட்டது. உங்களில் எண் 2 இணை கடமைப்பட்டவர்களாக திகழ்கிறீர்கள் மற்றும் இல்லை. உங்களில் மொத்தம் ரூ.1000000 13.00% ROI மற்றும் 26.10.2026 நிலவரப்படி நிலுவையில் உள்ள இருப்பு ரூ.1,76,734/- மற்றும் மேலும் வட்டி மற்றும் 2.00% அபராத வட்டியுடன் 27.10.2026 முதல் பெறப்பட்ட தேதி வரை பாதசாந்திர ஒப்புதலுடன் வசூலிக்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட விலை, பிணை வைப்பு தொகை மற்றும் பிற விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

செலுத்த வேண்டிய பிணை வைப்பு தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி/நேரம்	14.12.2026, நேரம்: மாலை 4.00 மணி
மின் ஏல விற்பனையின் தேதி மற்றும் நேரம்	15.12.2026, நேரம்: மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகை, ஏலம் படிவம் சமர்ப்பிக்கும் இடம் மற்றும் தொடர்பு விவரங்கள்	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அரூர் கிளை, சர்வே எண்.21/35, சிந்தல்பாடி மெயின் ரோடு, அரூர், சேலம்-636903. மின்னஞ்சல்: balaji.n@cityunionbank.in Cell No:8925976139,8925964902
நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்)
நிர்ணயிக்கப்பட்ட விலையின் 10% பிணை வைப்புத் தொகை	ரூ.1,90,000/- (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)
ஏல உயர்வுத் தொகை	ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)
மின் ஏல இணையதளம்	www.auctionbazaar.com

சொத்து விவரப் பட்டியல்
எங்கள் வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்து
திரு.M.காமராஜ், அவர்களுக்குச் சொந்தமான சொத்து

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் மற்றும் தெற்கு மண்டலம், எல்லாப்புடையம்பட்டி தாலுக், கேவப்பாறை கிராமம், S.No:22/4A உள்ள ஹெக்டர் 0.20.5 மதிப்பீடு 0.60 புதிய எண்: 22/4A1 உள்ள ஹெக்டர் 0.15.5 மதிப்பீடு 0.48 எல்லைகள்:- விற்பனையாளரின் மீதமுள்ள நிலங்களின் கிழக்கில், பழனிவேல் நிலங்களுக்கு மேற்கே, சண்முகம் நிலங்களுக்கு வடக்கில், 12 1/2 அடிக்கு தெற்கில், கிழக்கு மேற்கு நோக்கிச் செல்லும் சாலை. அளவீடு: கிழக்கு மேற்கு 76 சதுர அடி, வடக்கு தெற்கு 92 சதுர அடி. 6992 சதுர அடி. 31 * 33 சதுர அடி அமைந்துள்ள RCC கூரை வீடு, 1 வது தளம் SC, எண்.1145 அனைத்து தள உரிமைகளுடன்.
விவரங்கள் ஏதுமில்லை.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு www.cityunionbank.bank.in இல் வழங்கப்பட்டுள்ள எங்கள் வங்கியின் இணையதளத்தை பார்க்கவும்.
இடம்: கும்பகோணம், நாள்: **29.10.2026** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

பதிவு அலுவலகம்:- 149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001.
CIN:L65110TN1904PLC001287, போன்: 0435-2402322, பேக்ஸ்: 0435-2431746,
இணையதளம்: www.cityunionbank.com

Canara Bank
தலைமை அலுவலகம் : பெங்களூரு

வாழப்பாடி கிளை
160/1, சேலம் – கடலூர் மெயின் ரோடு,
வாழப்பாடி, சேலம் மாவட்டம்.

கேட்பு அறிவிப்பு [SECTION 13(2)]

கடனீட்டு சொத்துக்களைப் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்க சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழ், வங்கியில் பெற்ற **1) திருமதி. M.வெள்ளையம்மாள், (கடன்தாரர் & அடமானதாரர்),** க/பெ. K. மணிவேல், க.எண்.9/98, சமத்துவபுரம், புங்கவாடி ரோடு, நடுவலூர் அஞ்சல், கெங்கவல்லி தாலுக்கா, சேலம் - 636105. **2) திரு. K.மணிவேல் (இணை–கடன்தாரர்),** கருப்பண்ணன், க.எண்.9/98, சமத்துவபுரம், புங்கவாடி ரோடு, நடுவலூர் அஞ்சல், கெங்கவல்லி தாலுக்கா, சேலம் - 636105 அவர்களுக்கு **30-09-2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு பதிவுத் தபால் மூலம் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட தபால் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துள்ளது. எனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை பெற்றுக் கொள்ளாமல் நீங்கள் தவிர்த்துள்ளதாக நம்புவதற்கு இடமிருக்கிறது. அதனால் கேட்பு அறிவிப்பு இந்த தினசரி செய்தித்தாள் மூலமாக வெளியிடப்படுகிறது. நீங்கள் **HOUSING FINANCE** கடன் பெற்றுக்கொண்டு அதற்கு அடமானமாக உங்கள் சொத்துரிமை ஆவணங்களை வங்கியில் ஒப்படைப்பு செய்து உள்ளீர்கள். கடன் தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்தாததால், மேலும் **கனரா வங்கி, வாழப்பாடி கிளையில் 29-09-2026** அன்று கடன் நிலுவைத்தொகை **ரூ.19,28,167.16/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து நூற்று அறுபத்து ஏழு மற்றும் பதினாறு பைசா மட்டும்)** மற்றும் பின் தொடர்ந்த வட்டி மற்றும் இதர செலவுகள் நீங்கள் செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகை அதன் பின் தொடர் வட்டி முதலியவைகளை திரும்ப செலுத்த, உத்திரவாதத்திற்காக நீங்கள் **கனரா வங்கி, வாழப்பாடி கிளையில்** அடமானமாக கீழ்க்கண்ட சொத்துக்களை பிணையமாகக் கொடுத்திருக்கிறீர்கள்.


அசையாச் சொத்து விபரம் :

இச்சொத்தின் நிலம் மற்றும் RCC வீட்டு கட்டிடமானது **திருமதி. M.வெள்ளையம்மாள், க/பெ. K.மணிவேல்** பெயரில் உள்ளது. இச்சொத்து சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், கெங்கவல்லி துணைப்பதிவு மாவட்டம், கெங்கவல்லி தாலுக்கா, நடுவலூர் கிராமம், பிளாட் எண்.73, ச.எண்.228/8, சப்–டிவிசன்படி ச.எண்.288/8A, சப்–டிவிசன்படி ச.எண்.288/8A1, சப்–டிவிசன்படி ச.எண்.288/8A1A (பகுதி), பட்டா எண்.4864–ல் அமைந்துள்ளது. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 910 ச.அடி இதற்குண்டான **எல்லைகள்** மற்றும் நேரியல் அளவீடுகள் கீழ் உள்ளவாறு : பிளாட் எண்.41–க்கு **வடக்கு,** கிழமேல் 20 அடி அகல பொது வழிப்பதைக்கு **தெற்கு,** பிளாட் எண்.72–க்கு **கிழக்கு,** சசிகுமாருக்கு சொந்தமான 90 ச.அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண்.73–க்கு **மேற்கு.** இதனிடையே மேற்குறிப்பிட்ட நேரியல் அளவீடுகள் : கிழமேல் வடக்கு பக்கம் 22.75 அடி, கிழமேல் தெற்கு பக்கம் 22.75 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 40 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 40 அடி.

இவ்வாறு நிலம் மற்றும் வீட்டு கட்டிடத்தின் அளவுகள் 910 ச.அடி இதனுடன் அனைத்து உரிமைகளும் சகிதம்.

எனவே கடன் பெற்றவராகிய / உத்திரவாதமளித்தவராகிய நீங்கள் இந்தக் கடன் நிலுவைத் தொகை, தொடர்ந்த வட்டி, இதர செலவுத் தொகைகள் மற்றும் இந்த கேட்பு அறிவிப்புக்கான செலவு போன்றவற்றை மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் சொத்து ஆதாரங்களின் பேரில் வங்கி பெற்றுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடனீட்டுச் சொத்துக்களை பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(4)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் உரிமையை பிரயோகிக்க வங்கிக்கு உரிமை உண்டு. எனவே இந்த நோட்டீஸ் வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த தவறினால், பிணையத்தை அமல்படுத்த வேண்டியிருக்கும் என பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 3(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட சட்டப் பிரிவு 13(13) ன் கீழ் நீங்கள் மேற்படி சொத்தை வங்கியின் ஒப்புதலின்றி எந்தவித சொத்துரிமை மாற்றமும் செய்யக் கூடாது.

தேதி : 30-09-2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சேலம் கனரா வங்கி


கல்வி, வேலை வாய்ப்பு
செய்திகளுக்கு...
www.dinamani.com

முதல்வர் கோப்பை கைப்பந்து

சேலம் மகளிர் அணி 4-ஆவது முறையாக முதலிடம்


முதல்வர் கோப்பை கைப்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சேலம் மாவட்ட வீராங்கனைகளை பாராட்டிய மாவட்ட கைப்பந்து கழகத் தலைவர் ராஜ்குமார்.

சேலம், அக். 29: சென்னையில் நடைபெற்ற முதல்வர் கோப்பைக்கான கைப்பந்துப் போட்டியில் சேலம் மாவட்ட மகளிர் அணி தொடர்ந்து 4-ஆவது முறையாக முதலிடம் பிடித்துச் சாதனை படைத்துள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் கடந்த 24-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை முதல்வர் கோப்பைக்கான கைப்பந்துப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 38 மாவட்ட அணிகள் பங்கேற்றன. சென்னை, சேலம் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை அணியை வீழ்த்திய சேலம் மாவட்ட மகளிர் அணி, தொடர்ந்து நான்காவது முறையாகச் சாம்பியன் பட்டம் வென்றது.

வெற்றிபெற்ற வீராங்கனைகளை மாவட்ட கைப்பந்துக் கழகத் தலைவர் ராஜ்குமார் வியாழக்கிழமை நேரில் அழைத்துப் பாராட்டினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கைப்பந்துக் கழக ஆலோசகர் விஜயராஜ், துணைத் தலைவர் அகிலா தேவி, செயலாளர் சண்முகவேல், இணைச் செயலாளர் வடிவேல், பயிற்சியாளர்கள் பரமசிவம், சுவீனா, ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தேசியக்கொடி ஏற்றுவதில் கவனக்குறைவு: உடற்கல்வி ஆசிரியர் பணியிடை நீக்கம்

சேலம், அக். 29: சேலத்தில் குடியரசு தின விழா போட்டி தொடக்க நிகழ்ச்சியின்போது தேசியக்கொடி தவறுதலாகத் தலைகீழாக ஏற்றப்பட்ட விவகாரத்தில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் குடியரசு தின விழா போட்டி தொடக்க நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இதில் தேசியக்கொடியை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் ஏற்றி வைத்தார்.

அப்போது, தேசியக்கொடி சரியாகக் கட்டப்படாததால் காவி, வெள்ளை நிறப் பகுதிகள் அறுந்து கீழே தொங்கின. இதனால் பச்சை நிறப் பகுதி மேலே வந்து, தேசியக் கொடி தலைகீழாகப் பறந்தது.

உடனடியாகக் கொடி சரியாகக் கட்டப்பட்டு மீண்டும் ஏற்றப்பட்டது. இதையடுத்து அமைச்சர் மரியாதை செலுத்தினார்.

அரசு நிகழ்ச்சியில் கவனக்குறைவாகச் செயல்பட்டவர்கள் குறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எல்லப்பன் விசாரணை நடத்தினார்.

இதில், மேட்டுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் ஜான் (எ) ஜமீன்தார் கவனக்குறைவாகச் செயல்பட்டது தெரியவந்தது. இதையடுத்து, அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

Canara Bank
தலைமை அலுவலகம் : பெங்களூரு

இளம்பிள்ளை கிளை
No.152 A, புது ரோடு,
இளம்பிள்ளை, சேலம்.
Ph : 0427-2491353

கேட்பு அறிவிப்பு [SECTION 13(2)]

கடனீட்டு சொத்துக்களைப் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்க சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழ், வங்கியில் பெற்ற **1) திரு. S.பாலமணிகண்டன் (கடன்தாரர்)** த/பெ. சிவகுமார், க.எண். 305/1, நரசிம்மன் ரோடு, மூலப்பிள்ளையார் கோவில், செவ்வாய்பேட்டை, சேலம் - 636 002 **2) திருமதி. S. லட்சுமி தேவி (இணை–கடன்தாரர் / அடமானதாரர்),** க/பெ. சிவகுமார், க.எண். 305/1, நரசிம்மன் ரோடு, மூலப்பிள்ளையார் கோவில், செவ்வாய்பேட்டை, சேலம் - 636 002 **மாற்று தொடர்பு முகவரி: திருமதி. S. லட்சுமி தேவி,** க/பெ. சிவகுமார், சர்வே எண். 37/1A1B, ஸ்ரீ கணபதி முருகன் அருள் நகர், நல்லம்பட்டி கிராமம், வீரபாண்டி தாலுக்கா, சேலம் - 636 307 ஆகியோருக்கு **30-09-2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு பதிவுத் தபால் மூலம் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட தபால் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துள்ளது. எனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை பெற்றுக் கொள்ளாமல் நீங்கள் தவிர்த்துள்ளதாக நம்புவதற்கு இடமிருக்கிறது. அதனால் கேட்பு அறிவிப்பு இந்த தினசரி செய்தித்தாள் மூலமாக வெளியிடப்படுகிறது. நீங்கள் **HOUSING FINANCE** கடன் பெற்றுக்கொண்டு அதற்கு அடமானமாக உங்கள் சொத்துரிமை ஆவணங்களை வங்கியில் ஒப்படைப்பு செய்து உள்ளீர்கள். கடன் தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்தாததால், மேலும் **கனரா வங்கி, இளம்பிள்ளை கிளையில் 27-09-2026** அன்று கடன் நிலுவைத் தொகை **ரூ.9,83,175.84/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து நூற்று எழுபத்து ஐந்து மற்றும் எண்பத்து நான்கு பைசா மட்டும்)** மற்றும் பின் தொடர்ந்த வட்டி மற்றும் இதர செலவுகள் நீங்கள் செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகை அதன் பின் தொடர் வட்டி முதலியவைகளை திரும்ப செலுத்த, உத்திரவாதத்திற்காக நீங்கள் **கனரா வங்கி, இளம்பிள்ளை கிளையில்** அடமானமாக கீழ்க்கண்ட சொத்துக்களை பிணையமாகக் கொடுத்திருக்கிறீர்கள்.

அசையாச் சொத்து விபரம் :

இச்சொத்தின் நிலம் மற்றும் RCC வீட்டு கட்டிடமானது **திருமதி. S. லட்சுமி தேவி, க/பெ. சிவகுமார்** பெயரில் உள்ளது.

இச்சொத்தானது சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சேலம் மேற்கு ஜாயின்ட் எண். 3, துணை பதிவு மாவட்டம் மற்றும் சேலம் மேற்கு தாலுக்கா, நல்லம்பட்டி கிராமம், ஸ்ரீ கணபதி முருகன் அருள் நகர், பழைய சர்வே எண்.37/1 ரீசர்வே எண். 37/1A, புதிய சர்வே எண். 37/1A1, சமீபத்திய சர்வே எண். 37/1A1B, பட்டா எண். 755, பிளாட் எண். 62-ல் அமைந்துள்ளது. மொத்த பரப்பளவு 819 சதுர அடி. இதனுடன் பின்வரும் நேரியல் அளவுகள் : கிழமேல் இருபுறமும் 21 அடி, தென்வடல் இருபுறமும் 39 அடி. இதில் இடையில் உள்ள பின்வரும் எல்லைகள்: பிளாட் எண்.75-க்கு **வடக்கு,** 20அடி அகல கிழமேல் ரோட்டிற்கு **தெற்கு,** பிளாட் எண். 61-க்கு **கிழக்கு,** பிளாட் எண்.63-க்கு **மேற்கு.** இதனுடன் அனைத்து பொருத்தல்களும் மற்றும் அனைத்து தடபாத்தியங்களும் சேர்ந்தது.

எனவே கடன் பெற்றவராகிய / உத்திரவாதமளித்தவராகிய நீங்கள் இந்தக் கடன் நிலுவைத் தொகை, தொடர்ந்த வட்டி, இதர செலவுத் தொகைகள் மற்றும் இந்த கேட்பு அறிவிப்புக்கான செலவு போன்றவற்றை மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் சொத்து ஆதாரங்களின் பேரில் வங்கி பெற்றுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடனீட்டுச் சொத்துக்களை பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(4)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் உரிமையை பிரயோகிக்க வங்கிக்கு உரிமை உண்டு. எனவே இந்த நோட்டீஸ் வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த தவறினால், பிணையத்தை அமல்படுத்த வேண்டியிருக்கும் என பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 3(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட சட்டப் பிரிவு 13(13) ன் கீழ் நீங்கள் மேற்படி சொத்தை வங்கியின் ஒப்புதலின்றி எந்தவித சொத்துரிமை மாற்றமும் செய்யக் கூடாது.

தேதி : 30-09-2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சேலம் கனரா வங்கி

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2528 கனஅடி

மேட்டூர், அக். 29: மேட்டூர் அணைக்கு வியாழக்கிழமை காலை 2959 கனஅடியாக இருந்த நீர்வரத்து மாலையில் விநாடிக்கு

2528 கனஅடியாக குறைந்தது.

அணையில் இருந்து விநாடிக்கு 1000 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 55.21 அடியில் இருந்து 55.27 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 21.29 டிஎம்சியாக உள்ளது.

ரயிலில் அடிபட்டு கல்லூரி மாணவர் உயிரிழப்பு


திவாகர்

சேலம், அக். 29: சேலம் அருகே தண்டவாளத்தைக் கடக்க முயன்ற கல்லூரி மாணவர் ரயிலில் அடிபட்டு வியாழக்கிழமை உயிரிழந்தார்.

சேலம் - விருத்தாசலம் இடையிலான பயணிகள் ரயில் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சேலம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு விருத்தாசலம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அப்போது, டவுன் ரயில் நிலையத்துக்கும் அயோத்தியாப்பட்டணம் ரயில் நிலையத்துக்கும் இடையே மிலிட்டரி சாலையில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற கல்லூரி மாணவர் மீது ரயில் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவலறிந்து வந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கோபண்ணா தலைமையிலான இருப்புப் பாதை போலீஸார், மாணவரின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

விசாரணையில், உயிரிழந்தவர் பெரம்பலூர் மாவட்டம், வேப்பங்குறிச்சி மங்களமேடு கிராமத்தைச் சேர்ந்த திவாகர் (19) என்பது தெரியவந்தது. அருகிலுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்த அவர், கல்லூரிக்குச் செல்லும் வழியில் தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது ரயிலில் அடிபட்டு உயிரிழந்தது தெரியவந்தது.

இதுகுறித்து ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

யூகோ வங்கி
(இந்திய அரசு நிறுவனம்)
(தலைமை அலுவலகம்:எண்.10, BTM சரணி, கொல்கட்டா-700001)

சேலம் செவ்வாபேட்டை கிளை,
CSI வளாகம், போர்ட் மெயின் ரோடு,
சேலம் - 636 001.
Ph: 0427 - 2215415, 2210175
மின்னஞ்சல் : salem@uco.bank.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI ACT 2002-ன் கீழ்)

அசையா சொத்தை விற்பதற்கான பொது விற்பனை அறிவிப்பு - விதி - (8) 6

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI)-ல் விதி 8(6)-ன் கீழ் வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களை மின்னணு ஏல முறையில் விற்பனை செய்தல்)

பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது என்னவெனில், யூகோ **வங்கியின்** அதிகாரபூர்வ அதிகாரியானவர், வங்கியிடமுள்ள கடன் கணக்குகள் தொடர்பாக கீழே குறிப்பிட்டுள்ள, அடமானமாகவுள்ள அசையா சொத்துக்களை தமது அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்கள் பாக்கித்தொகையினை செலுத்த தவறியதால் இந்தச் சொத்துக்களை **'உள்ள இடத்தில் உள்ளவாறு' 'உள்ள நிலையில் உள்ளவாறு'** மற்றும் **'உள்ளது உள்ளவாறு', 'வங்கியிடமிருந்து எவ்வித உதவியும் கோரமுடியாது'** எனும் அடிப்படையில் விற்பதென வங்கி முடிவெடுத்துள்ளது.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் & முகவரி / பாக்கித்தொகை விவரம் / கோரிக்கை அறிவிப்பு தேதி & சுவாதீன அறிவிப்பு தேதி	அசையா சொத்தின் விபரம்
1. திரு. M. குமரேசன் (விண்ணப்பதாரர்), த/பெ. திரு.K. முருகேசன், எண்.43, அருந்ததியர் தெரு, செந்தாரப்பட்டி, கங்காவல்லி தாலுகா, சேலம்-636110. **2. திருமதி.K. கலைச்செல்வி (இணை-விண்ணப்பதாரர்),** க/பெ.திரு. M. குமரேசன், எண்.43, அருந்ததியர் தெரு, செந்தாரப்பட்டி, கங்காவல்லி தாலுகா, சேலம்-636110. **பாக்கித் தொகை:** 27.10.2026 அன்றுள்ளபடி ரூ.4,34,918.76 (நான்கு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஒன்பது நூற்று பதினெட்டு ரூபாய் எழுபத்தாறு பைசா மட்டும்)- 29.09.2026 வரை கணக்கிடப்பட்ட வட்டியுடன் கூடிய தொகை - மற்றும் ஒப்பந்த விகிதப்படியான கூடுதல் வட்டி மற்றும் இதர தொடர்புடைய செலவுகள், கட்டணங்கள் போன்றவை. குறிப்பு: SARFAESI சட்டம், 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ், 20.02.2025 அன்று ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 30.11.2024 அன்றுள்ளபடி , 29.11.2024 வரையிலான வட்டி, அதன் மீதான வருங்கால வட்டி மற்றும் இதர கூடுதல் கட்டணங்கள் உட்பட, மொத்தம் ரூ.4,04,022.14/- (ரூபாய் நான்கு லட்சத்து நான்கு ஆயிரத்து இருபத்தி இரண்டு மற்றும் பதினான்கு பைசா மட்டும்) செலுத்த வேண்டியுள்ளது. இதில் ஏதேனும் திருப்பிச் செலுத்தல் (r e p a y m e n t) மேற்கொள்ளப்பட்டிருந்தால், அந்தத் தொகை கழிக்கப்படும். **கோரிக்கை அறிவிப்பு தேதி:** 20.02.2025; **அடையாளப்பூர்வ சுவாதீன தேதி:** 07.05.2025	சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தம்மம்பட்டி சார்பதிவு மாவட்டம், கங்கவள்ளி வட்டம், செந்தாரப்பட்டி கிராமம், அருந்ததியர் தெரு, நத்தம் சர்வே எண் 149/2, புதிய சர்வே எண் 548/22 ஆகியவற்றில் அமைந்துள்ள 558 சதுர அடி நிலம் (கிழக்கு-மேற்காக 31 அடி, வடக்கு-தெற்காக 18 அடி அளவு கொண்டது). இந்த நிலம் பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டது: நல்லதம்பி என்பவருக்குச் சொந்தமான வீட்டுச் சொத்திற்கு கிழக்கில்; அல்லிமுத்து என்பவருக்குச் சொந்தமான வீட்டுச் சொத்திற்கு மேற்கில்; ராஜா மற்றும் தளகோட்டி ஆகியோருக்குச் சொந்தமான வீட்டுச் சொத்து மற்றும் 5% அடி அகலமுள்ள பொதுப் பாதைக்கு வடக்கில்; மொட்டையன் என்பவருக்குச் சொந்தமான வீட்டுச் சொத்திற்கு தெற்கில். இந்த நிலத்தில், அனைத்து வழக்கமான மற்றும் நடைமுறைப் பாதை உரிமைகளுடன், கதவு எண்கள் 33 மற்றும் 33-A கொண்ட கட்டிடங்கள் அமைந்துள்ளன (வீட்டு வரி மதிப்பீட்டு எண்கள்: 1338 மற்றும் 1337). **இந்தச் சொத்து, 17.04.2002 தேதியிட்ட 442/2002 என் கொண்ட விற்பனைப் பத்திரத்தின்படி,** திரு. எம். குமரேசன் என்பவருக்குச் சொந்தமானது.

குறைந்தபட்ச விலை: **ரூ.13.05 இலட்சம்** டேவணித் தொகை: **ரூ.1.31 இலட்சம்** ஏல உயர்வு தொகை **ரூ.25,000/-**

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்: 17.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

(தேவைப்பட்டால், வரம்பற்ற கால நீட்டிப்புகளுடன் தலா 10 நிமிட நேரத்திற்கு நடைபெறும்)

விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் **07.11.2026** அன்று காலை **11.00** மணி முதல் மாலை **04.00** வரை முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடலாம். விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை **(1) https://baanknet.com (2) https://www.uco.bank.in (under Notice Section)** ஆகிய இணையதளங்களில் பார்க்கலாம். மேலும் விபரங்களுக்கு : **திருமதி.S. அபிராமி, மொபைல்: 9147403302; திரு.ராஜாராம், மொபைல்: 9994860035** ஆகியோர்களை தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சேலம்; தேதி : 29.10.2026 அதிகாரபூர்வ அலுவலர், யூகோ வங்கி

சேலம் கோட்டையில் எஸ்பிஐ சிறு, நடுத்தர தொழில் வங்கி கிளை திறப்பு

சேலம், அக். 29: சேலம் கோட்டையில் பாரத ஸ்டேட் வங்கியின் சிறு மற்றும் நடுத்தர தொழில் வங்கிக் கிளை அண்மையில் திறக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் 54-ஆவது கிளையாக, கோட்டை பாரத ஸ்டேட் வங்கி கட்டடத்தில் இந்த கிளை திறக்கப்பட்டது. சென்னை வட்டார பாரத ஸ்டேட் வங்கிப் பொது மேலாளர் சித்த பட்டுல்லா ஹரிதா பூர்ணிமா கிளையை திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் சேலம் மண்டலத் துணைப் பொது மேலாளர் (நிர்வாகம்) அம்பிகா பிரசாத் பூயன், சேலம் மண்டல மேலாளர் அஸ்வத் துரைசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து, வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் கடன் அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டன. விழாவில் சிறு மற்றும் நடுத்தர தொழில் கிளையின் முதன்மை மேலாளர் மேக்னா பிரபு நன்றி கூறினார்.



சேலம் கோட்டையில் எஸ்பிஐ சிறு மற்றும் நடுத்தர தொழில் வங்கி கிளை திறப்பு விழாவில், கடன் அனுமதி கடிதம் பெற்ற வாடிக்கையாளரை சிறப்பிக்கும் சேலம் மண்டல மேலாளர் அஸ்வத் துரை செல்வம்.

அக். 31-க்குள் சொத்து வரி செலுத்தினால் ரூ. 5000 வரை ஊக்கத்தொகை

சேலம், அக். 29ஜ்: சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டாவது அரையாண்டுக்கான சொத்து வரியை அக். 31-ஆம் தேதிக்குள் செலுத்தும் உரிமையாளர்கள், 5 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ. 5000 வரை ஊக்கத்தொகை பெறலாம் என மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

தமிழக அரசு அறிவித்துள்ள இந்தச் சலுகை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாநகராட்சி அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று அறிவுறுத்தி வருகின்றனர்.

சொத்து வரியை வரி வசூலிப்பாளர்கள், மண்டல வரி வசூல் மையங்கள், காசோலை, வரைவோலை மற்றும் https:tnurbanepay.tn.gov.in என்ற இணையவழிப் பரிவர்த்தனை மூலம் செலுத்தலாம். மேலும், ஜிபே, போன்பே, பேடிஎம் உள்ளிட்ட கைப்பேசி செயலிகள் வாயிலாகவும் பொதுமக்கள் தங்களது வங்கிக் கணக்குகளிலிருந்து வரியைச் செலுத்தலாம்.

பொதுமக்களின் வசதிக்காக அக். 31-ஆம் தேதி வரை சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் அனைத்து வரி வசூல் மையங்களும் செயல்படும். எனவே, சொத்து உரிமையாளர்கள் காலக்கெடுவுக்குள் வரியைச் செலுத்தி 5 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ. 5000 வரை ஊக்கத்தொகை பெறலாம் என மாநகராட்சி அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வழக்குரைஞரிடம் நகை பறித்த வழக்கில் 4 பேர் கைது

சேலம், அக். 29: சேலத்தில் வழக்குரைஞரை மிரட்டி நகை, பணம் பறித்துச் சென்ற வழக்கில் 4 பேர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 10 கிராம் தங்கச் சங்கிலி, 25 கிராம் வெள்ளிக் காப்பு மீட்கப்பட்டன.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த கணேசன் (27), சேலம் எம்டிஎஸ். நகரில் வாடகை வீட்டில் தங்கி, சேலம் நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றி வருகிறார். கடந்த 25-ஆம் தேதி மாலை சேலம் டவுன் ரயில் நிலையம் அருகே உள்ள முள்ளுவாடி கேட் தண்டவாளப் பகுதியில் சென்றபோது, மர்ம நபர்கள் அவரைக் கத்திமுனையில் மிரட்டி நகை, பணத்தைப் பறித்துச் சென்றனர்.

இதுகுறித்து கணேசன் அளித்த புகாரின்பேரில், சேலம் ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். அவர் அணிந்திருந்த 10 கிராம் தங்கச் சங்கிலி, ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள 50 கிராம் வெள்ளிக் காப்பு, ரூ. 3,460 ரொக்கம் பறிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், வழக்கில் தொடர்புடைய தினேஷ்குமார் (22), குணசீலன் (30), கௌதமேஸ்வரன் (32), செரிபா (37) ஆகிய 4 பேரையும் சேலம் அரசு கலைக் கல்லூரி அருகே உள்ள அணைமேடு பாலத்தின் கீழ் பகுதியில் போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 10 கிராம் தங்கச் சங்கிலி, 25 கிராம் வெள்ளிக் காப்பு மீட்கப்பட்டன. மீதமுள்ள வெள்ளிக் காப்பு, ரொக்கம் ஆகியவற்றை மீட்பது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எடப்பாடியில் நிறம் மாறிய நிலத்தடி நீர்: பொதுமக்கள் புகார்

எடப்பாடி, அக். 29: எடப்பாடி நகராட்சிக்கு உள்பட்ட வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் நிலத்தடி நீர் சிவப்பு, இளஞ்சிவப்பு உள்ளிட்ட பல்வேறு நிறங்களில் வருவதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த கண்ணன் வியாழக்கிழமை காலை தனது வீட்டில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்துள்ளார். அப்போது குழாயில் இருந்து வெளியேறிய தண்ணீர் சிவப்பு, இளஞ்சிவப்பு நிறங்களில் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர், இதுகுறித்து அக்கம்பக்கத்தினருக்குத் தகவல் தெரிவித்தார்.

அங்கு வந்த பொதுமக்களும் சிவப்பு நிறத்தில் வெளியேறிய தண்ணீரைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். மேலும், அப்பகுதியில் உள்ள பல வீடுகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீர் வெவ்வேறு நேரங்களில் பல்வேறு நிறங்களில் வருவதாக அவர்கள் புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது:

எடப்பாடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் அரசு அனுமதியின்றிப் பல இடங்களில் சாயப்பட்டறைகள் செயல்படுவதாகக் கூறப்படுகிறது. இவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளைச் சிலர் சாக்கடைக் கால்வாய்களிலும், பல நிறுவனங்கள் அப்பகுதியில் உள்ள வறண்ட ஆழ்துளைக் கிணறுகளிலும் கொட்டுவதாகத் தெரிகிறது.

இதனால், சாயக்கழிவுகள் நிலத்தடி நீரில் கலந்து, தண்ணீர் மாசடைந்து பல்வேறு நிறங்களில் வெளியேறுவதாகவும், இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு அடிக்கடி உடல்நலக் குறைபாடுகள் ஏற்படுவதாகவும் அவர்கள் புகார் தெரிவித்தனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அப்பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளின் நீர் மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலத்தடி நீர் தொடர்ந்து மாசடைவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.